திரு. என். ஆர். தியாகராஜன் : பாசன கால்வாய்கள் தோண்ட இயலாத பகுதிகளில் அவை அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : குறிப்பிட்டு இடத்தைச் சுட்டிக் காட்டி உணர்த்தினால் அரசு அதை யோசிக்கும்.

திரு. என். வி. நடராசன் : வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் எப்போது நிறைவேறும் ? அதற்காகும் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்கு ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் அளவிற்கு மதிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த வைகைக் கால்வாய்க்குத் தக்க இடங்களில் அணைகள் கட்டுதல், படுகைப் பொறி மதகுகள் அல்லது தடுப்பு அணைகள் ஆகியவற்றைக் கட்டுவது, சில வாய்க்கால்களை ஒன்றாகச் சேர்ப்பதும் அவற்றை அணைக்கட்டின் மேல் பகுதிக்கு மாற்றுவது, வாய்க்கால்களின் மேல் பகுதியில் தலைமதகுகள் கட்டுவது, வாய்க்கால்களின் தூர் அகற்றி வைகையிலிருந்து பிரியும் எண்ணற்ற வாய்க்கால்களைச் சீரமைத்து மேநிலைப்படுத்துவதன் மூலம் நிலைமையைச் சீர் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 1968–69-ல் அந்த வேலை ஆரம்பிக்கப்படும். நான்காவது திட்டத்தில் அதற்காக ரூ. 300 லட்சம் ஒதுக்கி 1968–69-ல் ஒரு லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். வி. நடராசன் : தாமிரபரணியில் இது போன்ற சீரமைப்புக் கால்வாய்த் திட்டம் நடைமுறைக்கு வருமா? அப்படியானால் அத் திட்டத்தின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தாமிரபரணி வாய்க்கால்களை மாற்றியமைத்தலைப் பொறுத்தவரையில் மாற்றியமைத்தலுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வாய்க்கால்கள் தற்சமய வேலையின் நிலை ஆகியவற்றின் விவரங்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். வடக்குக் கோடை மேலழகியான்கால், தெற்குக் கோடை மேலழகியான்கால், நதியுண்ணிக் கால், கோடகன்கால் ஆகிய திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன. பாளையங்கால், மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், இத் திட்டங்களின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. கன்னடியன் கால், திருநெல்வேலிக்கால் ஆகியவை 1968–69-ம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டமாக எடுத்துக்கொள்ள நிரந்தர நிதிக் குழு இப்போது ஒப்புதல் அளித்திருக்கிறது.

Nandiyar New Channel

* 138. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the action taken against the persons concerned for the iron-tank having been washed away due to the floods in Nandiyar new channel under the control of river irrigation (P.W.D.) and which is near the Palaiapatti villlage in Tiruchirappalli district ;

(*b*) whether steps will be taken for repairing the said tank and making water available for the Kuruvai cultivation next year ;

(c) whether the old tank is replaced or repaired ;

(*d*) whether the work is undertaken by the P.W.D. Workshop itself or done through private companies by tender ?

1st March 1968]

நந்தையார் புது வாய்க்கால்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி ஜில்லா, பாளையம்பாடி கிராமத்திற்கு அருகில் பொது மராமத்து ஆற்றுப் பாசன நிர்வாகத்திலுள்ள நந்தையார் புது வாய்க் காலில் உள்ள இரும்புத் தொட்டி வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

*(இ) வரும் ஆண்டு குறுவை சாகுபடிக்குத் தண்ணீர் கிடைப்பதற்குத் தொட்டி வேலை பூர்த்தி செய்யப்பட்டுத் தாமதமில்லாமல் தண்ணீர் வர ஏற்பாடு செய்யப்படுமா ?

(உ) இரும்புத் தொட்டி புதிதாக அமைக்கப்படுகிறதா அல்லது பழைய தொட்டிப் பழுது பார்க்கப்படுகிறதா ?

(எ) இவ்வேலை அரசாங்கப் பணித் துறையில் (P.W.D. ஒர்க் ஷாப்பில்) செய்யப்படுகிறதா, அல்லது தனிப்பட்ட கம்பெனியில் டெண்டர் மூலம் வேலை செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) பம்பு செட்டுகள் அமைத்து அதன் மூலம் நீர் வழங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பயிர்கள் திருப்திகரமாக அறுவடை செய்யப்படும். இரும்புத்தொட்டி பாலக்காலை திரும்பவும் கட்டியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(இ) ஆம். அவ்வாறு எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) புதிய இரும்புத்தொட்டி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ) இரும்புத் தொட்டியோடு, இரும்புத்தூணும் சென்னை பொறி யியல் பட்டறையில் உருவாக்கப்படும். கிணறு தோண்டும் வேலையும், அஸ்திவார வேலையும் ஒப்பந்தத்தின் மூலம் செய்யப்பட்டு உள்ளன. இதற்கான டெண்டர்கள் ஏற்கெனவே கோரப்பட்டுள்ளன.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்த இரும்புத் தொட்டி அடித்துச் செல்லப்பட்டதால் ஆறுயிரம் ஏக்கர் இந்தச் சாகுபடியில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மோட்டார் வைத்து தண்ணீர் இறவை செய்ததால் மட்டும் நிச்சயமாக அந்தப் பகுதியிலுள்ள ஆறுயிரம் ஏக்கர் பூர்த்தி செய்யப்படவில்லை. நிலம் பாழடைந்து இருக்கின்றது. இப்போது அதைச் செப்பனிட வேண்டுமென்றுல்கூட, இந்த ஜூன் மாதத்திற்குள்ளாக அந்த வேலை பூர்த்தியாகும் என்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. 30 அடி ஆழத்தில் செய்யக்கூடிய அந்த வேலையை எப்படி அரசாங்கம் செய்யப்போகிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த இரும்புத் தொட்டி வேலை உறுப்பினரின் கண்ணெதிரில் நடைபெறவில்லை என்றாலும் வொர்க் ஷாப்பில் பணிமனையில் நடைபெற்று வருகிறது. ஜூன் மாதத்திற்குள் வேலை முடிந்துவிடும். அதற்காகும் செலவு ரூ. 1·55 லட்சமாகும் என்று கணக்கிட்டு வேலை விரைவுபடுத்தப்பட்டு வருகிறது.

திரு. டி. கே. சுப்பையா: இருப்புத் தொட்டி வொர்க்ஷாப்பில் செய்வதால் அது குறித்த காலத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதை அமைப்பதற்கும் காங்ரீட் செய்வதற்கும் காண்ட்ராக்டர் மூலம்தான் செய்ய வேண்டும். இரும்புத் தூண் அமைக்க 30 அடி அளவுக்கு காங்ரீட் செய்யவேண்டுமென்றால் அதற்குக் காலம் அதிகமாகும். அதனால் டெண்டர்கள் விடுவது என்றால் அதற்கு அதிக காலதாமதமாகுமே அதற்கு என்ன செய்வது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : டெண்டர் விடாவிட்டாலும் அதற்குக் கேள்வி பிறக்குமே அதற்கு என்ன செய்வது ?